
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1066**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

37

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# தனியாரிடம் முடங்கிய அரசு நிலம்!



சென்னையின் மையமான இடத்தில் அமைந்துள்ளது கிண்டி குதிரைப் பந்தய மைதானம். 160 ஏக்கர் 86 சென்ட் நிலப்பரப்பு கொண்டது. நீண்ட சட்டப் போராட்டங்களுக்குப் பின்னர், திராவிட மாடல் அரசு அந்த நிலத்தை மீட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக, அந்த நிலத்தில் பசுமைப் பூங்கா அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலத்தை மீட்பதற்கான சட்டப் போராட்டம், குதிரைப் பந்தயத்தைத் தடை செய்வதற்கு நடத்தப்பட்ட சட்டப் போராட்டங்களைவிட மிக நீளமானது.

இன்று பல கோடி ரூபாய் மதிப்பிலான அந்த நிலத்தை, 1945-ஆம் ஆண்டில், ஆண்டுக்கு 614 ரூபாய் வீதம் 99 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம் செய்துள்ளது மெட்ராஸ் ரேஸ் கிளப். அதாவது, சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே, 99 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தில், ஒப்பந்த காலம் முடியும் முன்னரே மேலும் 99 ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளலாம் என்கிற ஒரு விதியும் சேர்க்கப்பட்டதால் , கிட்டத்தட்ட 198 ஆண்டுகளுக்கு சுமார் 160 ஏக்கர் பரப்பளவு கொண்ட குதிரைப் பந்தய மைதானம் சில தனிநபர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

ஒப்பந்தத்தின்படி, அரசுக்குக் கொடுக்க வேண்டிய ஆண்டு குத்தகை தொகை 614 ரூபாயை, 99 ஆண்டுகளுக்கு கணக்கிட்டு ஆரம்ப காலத்திலேயே, அதாவது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே கொடுக்கப்பட்டு விட்டது. அதன்படி, முதல் ஒப்பந்த காலம் 1944-ஆம் ஆண்டு வரை உள்ளது. ஒப்பந்த ஷரத்துபடி, அதன்பின்னர் 99 ஆண்டுகளுக்கு அந்த நிலத்தை மெட்ராஸ் ரேஸ் கிளப் அனுபவிக்கலாம்.

## வணிக நடவடிக்கைகள்

மெட்ராஸ் ரேஸ் கிளப்புடன் அன்றைய சென்னை மாகாண அரசு போட்டுக்கொண்ட வகையில் வணிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

முதலில் உணவகங்கள், மதுபான விடுதி வசதிகளை அமைத்தனர். பின்னர், சில ஆண்டுகளில் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்ற வகையில் மிகப் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டது. இப்படியே, அந்த இடம் வணிக நோக்கங்களுக்கும் பயன்படத் தொடங்கியது. குறிப்பாக, குதிரைப் பந்தயம் நடத்துவதற்கு எனக் குத்தகைக்கு பெறப்பட்ட நிலத்தில், வருமானம் ஈட்டக்கூடிய வணிக நடவடிக்கைகளும் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில்தான், 1967-ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டதும், சூதாட்டத்தைத் தடை செய்ய வேண்டும் என கலைஞர் திட்டமிட்ட நிகழ்வுகளும் தொடங்குகின்றன. 1970-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ரேஸ் கிளப் குத்தகை நிலத்துக்கான வாடகையை, அன்றைய சந்தை மதிப்பின் அடிப்படையில், 14 சதவிகிதம் வரை உயர்த்துவது தொடர்பாக, மாம்பலம் - கிண்டி வட்டாட்சியர் மூலம் ஒரு நோட்டீஸ் அளிக்கப்படுகிறது.

அதற்கு பதிலளித்த கிளப் நிர்வாகம், 'வாடகையை உயர்த்துவது தொடர்பாக, 1945-ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தில்

> 'குதிரைப் பந்தயம் நடத்துவதற்கு என்றுதான் குத்தகை ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது, ஆகவே, குதிரைப் பந்தயங்கள் நடத்துவதையே நிறுத்த வேண்டும்!'

ஒப்பந்தத்தில், அந்த இடம் குதிரைப் பந்தயத்துக்காக அளிக்கப்படுகிறது என்பது முக்கியமான ஷரத்து. அதாவது, நில உரிமை அரசிடம் இருக்கும், குதிரைப் பந்தயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளுக்கு நிலத்தை பயன்படுத்தும் உரிமையை மெட்ராஸ் ரேஸ் கிளப் கொண்டிருக்கும். ஆனால், காலப்போக்கில் ரேஸ் கிளப் சில முதலாளிகளின் கட்டுப்பாட்டில் வந்தபின்னர், குதிரைப் பந்தயத்துடன் சேர்ந்து பிற செயல்பாடுகள் என்கிற எந்தப் பிரிவும் சேர்க்கப்பட வில்லை' என மறுப்பு தெரிவித்ததுடன், நீதிமன்றத்தில் தடையும் பெற்றது.

1945-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத்தின்படி, எந்தவொரு மாற்றத்தையும், அரசு தனிப்பட்ட முறையில் செயல்படுத்த முடியாது என்பதை அறிந்த கலைஞர், 'குதிரைப் பந்தயம் நடத்துவதற்கு என்றுதான் குத்தகை ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது, ஆகவே, குதிரைப் பந்தயங்கள் நடத்துவதையே நிறுத்த வேண்டும்' என 1974-ஆம் ஆண்டில், சட்டமன்றத்தின் மூலம் அந்தப் பணியைத் தொடங்கினார்.

அந்தச் சட்டத்தை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்துக்கு வழக்கு சென்றதும், உச்ச நீதிமன்றமும் குதிரைப் பந்தயம் ஒரு வகையான விளையாட்டுதான், அது சூதாட்டமில்லை என்று தீர்ப்பு சொல்லி, அரசின் சட்டத்தை ரத்து செய்கிறது.

அந்தத் தீர்ப்புக்குப் பின்னரும், கழக ஆட்சிக்குப் பின்னரும், அதிகாரமுடைய, அரசுப் பதவியில இருக்கிற நபர்கள் அந்த கிளப்பில் சேர வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதுடன், அதிகாரிகள் வீட்டுப் பிள்ளைகளின் படிப்பு முதல், திருமணம் வரை, என்னென்ன வசதிகள் செய்துகொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் செய்துகொடுத்து, ஆதரவைச் சம்பாதித்துக் கொள்கிறது ரேஸ் கிளப் நிர்வாகம்.

இப்படியான சூழ்நிலையில்தான் 1986-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 'நிலம் கையகப்படுத்தல் சட்டம்' மூலம், ரேஸ் கிளப் வசமிருந்த நிலத்தை அரசு கையகப்படுத்த நடைபெற்ற முயற்சியும் சட்டவிரோதம் என முடக்கப்பட்டது. பின்னர், 1996-ஆம் ஆண்டு தீர்ப்பும், அதை உறுதி செய்து, பந்தயம் நடத்தும் உரிமையும், பந்தய நிலமும் ரேஸ் கிளப் வசமே மீண்டும் சென்றன.

## வாடகை உயர்த்த அதிகாரமில்லை

சுமார் 160 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம், மக்களின் வளர்ச்சிக்கு உதவாமல், சில தனியாருக்கு வருமானத்தைக் கொடுத்துக் கொண்டு இருந்தது. இந்த நிலையில், 25.06.2004 அன்று, மீண்டும் மெட்ராஸ் ரேஸ் கிளப்புக்கு நோட்டீஸ் அனுப்பியது அன்றைய அரசு. அதில், '1970-ஆம் ஆண்டு, வருவாய் துறை நிர்ணயித்த சந்தைமதிப்பின் அடிப்படையிலான வாடகைப்படி ரூ.310.70 கோடி நிலுவையை அரசுக்குச் செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது. (அதற்குக் காரணம் அம்மையார், கொண்டிருந்த தனிப்பட்ட பகை என்பது வேறு கதை) ஆனால், அப்போது, 1970-ஆம் ஆண்டு கலைஞர் கால ஆணைப்படிதான் நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புக்கு எதிராகவும் நீதிமன்றம் சென்றது மெட்ராஸ் ரேஸ் கிளப். 'வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பட்டா கொடுக்கும் அதிகாரம் மட்டுமே உள்ளது. வாடகைத் தொகையை நிர்ணயிக்கும் அதிகாரம் இல்லை' என நீதிமன்றத்தில் வாதிட்டனர். அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், 'சந்தை மதிப்பின் அடிப்படையில், வாடகையை உயர்த்துவதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் உள்ளது என்றாலும், நோட்டீஸ் அனுப்ப உரிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்று விசாரணையை ஒத்தி வைத்தது.

இப்படி, மெட்ராஸ் ரேஸ் கிளப் தொடர்பாக, 'அரசு நிலம், குத்தகை, வாடகை நிலுவை மற்றும் நிலம் மீட்பு' ஆகிய விவகாரங்களில் பல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்தன. அதே நேரத்தில், அதிகார மட்டத்தின் ஆதரவுடன் பல குழப்பங்களுக்கு இடையிலும் ரேஸ் கிளப் இயங்கிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில்தான், அரசுமாற்றம் ஏற்பட்டு, திராவிட மாடல் ஆட்சி மலர்கிறது. விவகாரத்தை கையில் எடுத்தார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு மேல்முறையீடு வழக்கை தொடர்ந்தது கழக அரசு.

...தொடரும்

## உழைப்பாளர்களை உடைமையாளர்களாக்கும் அரசு!

தமிழ்நாட்டின் கடன் அதிகரித்துள்ளது என்கிற பொத்தாம் பொதுவான வாதங்கள், பொருளாதார புள்ளிவிவரங்கள், தெளிவற்றவர்களின் பிதற்றல் என்று விமர்சித்தும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக் குறியீடுகளை பகிர்ந்தும், பலர் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர். இந்த வேளையில், சமூக ஆர்வலர் விக்னேஷ் ஆனந்த் பதிவிட்டுள்ள குறிப்பு கவனிக்க வைக்கிறது.

"2020 - ஆம் ஆண்டில், ரூ.12.4 லட்சம் கோடியாக இருந்த தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (G.S.D.P.) 2025-இல் ரூ.17.3 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. வளர்ச்சி விகிதமாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு 39% வளர்ச்சி அடைந்துள்ளது.

பெரிய மாநிலங்களில் (base value அடிப்படையில்) தமிழ்நாடு மிகச் சிறந்த பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் முதல் உற்பத்தித் துறை வரை அனைத்திலும் சீரான வளர்ச்சி உள்ளது. பெண்களுக்கான விடியல் பேருந்து பயணம், புதுமைப் பெண் திட்டம் போன்ற சமூக நலத் திட்டங்கள் மறைமுகமாக மாநிலத்தின் பொருளாதாரச் சுழற்சியை அதிகரித்துள்ளன (மக்களின் வாங்கும் திறன் உயர்ந்துள்ளது).

இந்திய துணைக்கண்டத்தில் பொருளாதாரத் துறையைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் ஒருவர் பேரறிஞர் அண்ணா, மற்றொருவர் மன்மோகன் சிங் அவர்கள். இன்று நூறு நாள் வேலைத் திட்டத்தில் ஒரு நாள் ஊதியம் 300+ ரூபாய் என்றால், அதற்கு 2011-இல் மன்மோகன் சிங் அவர்கள் எடுத்த நிலைப்பாடே காரணம். 2009-இல் தேர்தல் அறிக்கையில் நூறு நாள் வேலைத் திட்டத்தின் ஊதியம் 100 ரூபாய் என்று இருந்தது. ஆனால், அப்போதைய பணவீக்கத்தைக் குறைக்க 100 ரூபாயாக இருந்த ஊதியத்தை உயர்த்தினார். மக்களின் வாங்கும் திறனை உயர்த்தினால், பணவீக்கம் குறையும் என்பதே அதற்குக் காரணம். அதைத்தான் பொருளாதார அறிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு. 'உழைப்பாளர்களை உடைமையாளர்கள் ஆக்குவோம்' என்ற பேரறிஞர் அண்ணாவின் உயர்ந்த இலட்சியத்தை நோக்கி பயணிக்கிறது திராவிட மாடல் அரசு."

## ஃப்ளாஷ்பேக்



### 17 வயதில் தலைவருக்கு அருகில்...



க.சந்திரசேகர்

2018-ஆம் ஆண்டு, நான் பள்ளி இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்தேன். நம், திராவிட மாடல் நாயகர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், செயல் தலைவராக இருந்து, கழகத் தலைவராகப் பொறுப்பேற்று முதன் முதலில் திருச்சிக்கு வருகை தந்தார். அவருக்கு பிரமாண்டமான வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கழகப் பற்றோடு வளர்ந்த நானும், நண்பர்களும் கழகத்தினருடன் சென்று, தலைவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டோம். அவ்வளவு பெரிய கூட்டத்தில், பள்ளி மாணவனாகத் தலைவரை அருகில் சென்று காணும் வாய்ப்பு அமைந்தது, சொல்ல முடியாத மகிழ்ச்சி அளித்தது.

**- க.சந்திரசேகர், மாணவர் அணி துணை அமைப்பாளர், திருச்சி கிழக்கு மாநகரம், திருச்சி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

### தணிக்கையில் சிக்கிய அண்ணா பெயர்!

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை காலம். ஜூன் முதல் நாள், அடுத்த இரண்டு நாள்களில் வரும் தனது பிறந்த நாளுக்காக, பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி என்கிற தலைப்பில், முரசொலிக்கு கடிதம் எழுதினார் கலைஞர். தணிக்கைக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் 'என் அன்னையைவிட அதிக அன்பை, என் மீது அண்ணா பொழிந்தார்' என்கிற வரிகளை நீக்க வேண்டும் என்றார் தணிக்கை அதிகாரி. அதற்குக் காரணமும் கூறவில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131